www.Padasalai.Net www.TrbTnpsc.com

வகுப்பு : 10

தேர்வு எண் | 1 | 0 | 6 | 8 | 4 |

# மூன்றாம் திருப்புதல் தேர்வு - 2025

## தமிழ்

நேரம் : 3.00 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 100

குறிப்புகள் : i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.
ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக. 15X1=15

1. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?
அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்

2. இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச்சூடிப் போரிடுவதன் காரணம் ----------
அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

3. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ------- இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் -------
அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன்
இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்

4. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

5. 'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி' என்னும் அடியில் பாக்கம் என்பது -----------
அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

6. அண்ணன், தம்பி என்பது எவ்வகைத் தொகையைக் குறிக்கும்?
அ) வினைத்தொகை ஆ) வேற்றுமைத்தொகை
இ) உம்மைத்தொகை ஈ) பண்புத்தொகை

7. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை -
அ) குலை வகை ஆ) மணிவகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

8. வாய்மையே மழை நீராகி – இத்தொடரில் வெளிப்படும் அணி
அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்

9. காடும் காடு சார்ந்த இடமும் குறிக்கும் நில வகை ----------
அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) நெய்தல்

10. 'சதாவதானம்' என்னும் கலையில் சிறந்து விளங்கியவர் -----------
அ) பரஞ்சோதி முனிவர் ஆ) செய்குதம்பிப் பாவலர்
இ) கம்பர் ஈ) கி. ராஜநாராயணன்

11. "நானிலம் முழுவதும் முத்தமிழை நற்றமிழாகப் பரப்புவோம்" இத்தொடரிலுள்ள தொகைகளை விரிக்கக் கிடைக்கும் தமிழெண்களை எழுதுக.
அ) ௬, ௮ ஆ) ௪ , ௩ இ) ௭, ௧ ஈ) ௫, ௩

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக

*"விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்*
*கரு வளர் வானத்து இசையில் தோன்றி,*
*உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்,*
*உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்"*

12. இப்பாடலின் ஆசிரியர் -----------
அ) குலசேகராழ்வார் ஆ) கீரந்தையார் இ) பெருங்கௌசிகனார் ஈ) அதிவீரராம பாண்டியர்

13. 'ஊழ்' என்ற சொல்லின் பொருள் -----------
அ) முறை ஆ) யுகம் இ) கடல் ஈ) வானம்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

14. இவ்வடிகள் இடம்பெற்ற நூல் --------- எனப் புகழப்படுகிறது.

அ) பதிற்றுப்பத்தாந்ததாதி ஆ) ஓங்கு பரிபாடல் இ) போற்றிக் கலிவெண்பா ஈ) வேதாரண்யப் புராணம்

15. 'ஊழ் ஊழ்' என்பதன் இலக்கணக்குறிப்பு எழுதுக.

அ) அடுக்குத்தொடர் ஆ) எழுவாய்த்தொடர் இ) இரட்டைக்கிளவி ஈ) பெயரெச்சத்தொடர்

**பகுதி – II (மதிப்பெண்கள்:18) பிரிவு – 1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

**வினா எண் 21–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 4X2=8

16. ஹிப்பாலஸ் பருவக்காற்று குறிப்பு வரைக.

17. விடைக்கேற்ற வினா அமைக்க.

அ) முல்லைப் பாட்டு என்பது பத்துப்பாட்டு வகையினைச் சார்ந்த 103 அடிகளைக் கொண்ட நூல் ஆகும்.

ஆ) மொழி ஞாயிறு என்று அழைக்கப்படுபவர் தேவநேயப் பாவாணர் ஆவார்.

18. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி என்பதற்குச் சான்று தருக.

19. 'பிரபஞ்சத்தைச் சுமக்கின்றன மெல்லியத் தண்டுகள்' – இவ்வடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.

20. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?

21. 'தரும்' என்று முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

**பிரிவு – 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 5X2=10

22. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார் – ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?

23. மலைந்து – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

24. தீவக அணியின் வகைகள் யாவை?

25. உவமையைப் பயன்படுத்தி சொற்றொடர் உருவாக்குக.

அ) தாமரை இலைநீர் போல ஆ) சிலை மேல் எழுத்து போல

26. வினை அடியை விகுதிகளுடன் இணைத்து தொழிற்பெயர்களை உருவாக்குக.

(காண், சிரி, படி, தடு)

Padasalai.Net

27. கலைச்சொல் தருக.

அ) Guild ஆ) Patent

28. தொடர்களை அடைப்புக் குறிக்குள் குறிப்பிட்டவாறு மாற்றுக.

அ) கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.

(கலவைச் சொற்றொடராக்குக)

ஆ) ஓடிக் கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன் அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது.

(தனிச்சொற்றொடர்களாக மாற்றுக.)

**பகுதி – III (மதிப்பெண்கள்:18) பிரிவு – 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 2X3=6

29. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

ஜூன் முதல் செப்டம்பர் வரை தென்மேற்குப் பருவக் காற்றாகவும் அக்டோபர் முதல் டிசம்பர் வரை வடகிழக்குப் பருவக்காற்றாகவும் வீசுகிறேன். இவ்வாறாக, மழைப்பொழிவைத் தருகின்றேன். இந்தியாவின் முதுகெலும்பு வேளாண்மைதானே! இவ்வேளாண்மை சிறப்பதிலும் நாடு தன்னிறைவு பெறுவதிலும் நான் பங்கெடுக்கிறேன். இந்தியாவிற்குத் தேவையான எழுபது விழுக்காடு தென்மேற்குப் பருவக்காற்றாகக் கொடுக்கின்றேன்.

வினாக்கள்:

அ) இந்தியாவின் முதுகெலும்பு எது?

ஆ) இந்தியாவிற்குத் தென்மேற்குப் பருவக்காற்று கொடுக்கும் மழையின் அளவு யாது?

இ) வடகிழக்குப் பருவக்காற்று வீசும் காலம் எது?



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

30. 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' – இத்தொடரின் பொருள் தருக.

31. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா? என்பது குறித்து உனது கருத்துக்களை எழுதுக.

பிரிவு – 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 34– கட்டாய வினா 2X3=6

32. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?

33. காற்று எவ்வாறெல்லாம் வீச வேண்டும் என்று பாரதியார் கூறுகிறார்?

34. அடிபிறழாமல் எழுதுக.

அ) 'புண்ணியப் புலவீர்' எனத் தொடங்கும் திருவிளையாடற் புராணம் பாடல்.

ஆ) 'செம்பொனடி' எனத் தொடங்கும் முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் பாடல்.

பிரிவு – 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2X3=6

35. ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் எழுதுக.

36. வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு – இக்குறட்பாவை அலகிட்டு வாய்ப்பாடு எழுதுக.

37. நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று – இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.

பகுதி – IV (மதிப்பெண்கள்:25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5X5=25

38. அ) சிலப்பதிகார மருவூர்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும், அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக. (அல்லது)

ஆ) 'சந்தக்கவியில் சிறந்த கம்பன்' என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.

39. அ) உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக. (அல்லது)

ஆ) போதைப் பொருள்களால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு உனது நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. மதிவாணன், தனது தந்தை அருள்நேசனோடு கதவு எண் 4/172, கீழநீலிதநல்லூர், சங்கரன் கோவில் வட்டம், தென்காசி மாவட்டத்தில் வசித்து வருகிறார். அவர் கால்பந்து விளையாட்டில் மிகுந்த ஆர்வமும் திறனும் உடையவர். அவர் தனது திறமையை மேலும் வளர்த்துக் கொள்ள விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் பயிற்சி பெற விரும்புகிறார். தேர்வர் தன்னை மதிவாணனாகக் கருதி உரிய படிவத்தை நிரப்புக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

42. அ) மொழிபெயர்க்க.

Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Srilanka, Malaysia, Singapore, England and Worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all.

ஆ) பள்ளியிலும் வீட்டிலும் நீ செய்யும் செயல்களைப் பட்டியலிடுக.

குறிப்பு: செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா

உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

மனிதன் தனியானவன் அல்லன். அவன் சமூகக் கடலின் ஒரு துளி. அவனுக்குள் சமூகம் – சமூகத்துக்குள்ளே அவன். மனிதன் எல்லோரோடும் எல்லாவற்றோரும் எவ்வளவுக்கெவ்வளவு தன்னை இணைத்துக் கொள்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவனுடைய மகிழ்ச்சி பெருகுகிறது. இந்த மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்க வேண்டும் என்றால் அனைத்தையும் ஊடுறுவிச் செல்லும் பொது விதியான அறத்தை மனிதன் ஏற்க வேண்டும். அற இலக்கியங்களின் காலத்தை அறநெறிக்காலம் என்பர். அறநெறிக்கால அறங்கள் சமயம் சார்ந்தவை. ஆனால் சங்க கால அறங்கள் இயல்பானவை.

வினாக்கள்:

அ) மனிதன் எப்படிப்பட்டவன்

ஆ) மனிதனுக்கு எப்போது மகிழ்ச்சி பெருகுகிறது?

இ) அறநெறிக்காலம் எனப்படுவது யாது?

ஈ) மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்க மனிதன் என்ன செய்ய வேண்டும்?

உ) சங்ககால அறங்கள் எப்படிப்பட்டவை?

Padasalai.Net

## பகுதி – V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** 3X8=24

43. அ) தமிழின் இலக்கிய வளம் – கல்வி மொழி – பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் – அறிவியல் கருத்துக்கள் – பிறதுறைக் கருத்துக்கள் – தமிழுக்குச் செழுமை.

மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு 'தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

ஆ) முன்னுரை – போராட்டக் கலைஞர் – இயற்றமிழ்க் கலைஞர் – நாடகக் கலைஞர் – திரைப்படக் கலைஞர் – முடிவுரை – குறிப்புகளைக் கொண்டு விடையளிக்க.

44. அ) தற்கால உரைநடையில் அமையும் அணிநலன்கள் குறித்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) 'அன்னமய்யா' எனும் பெயருக்கும் அவரது செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை 'கோபல்லபுரத்து மக்கள்' கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

45. அ) கலைத்திருவிழாவிற்குச் சென்று வந்த நிகழ்வை கட்டுரையாக்குக.

**(அல்லது)**

ஆ) முன்னுரை – நாட்டு விழாக்கள் – இந்திய விடுதலைப் போர் – நாட்டின் வளர்ச்சியில் மாணவர் பங்கு – முடிவுரை.

குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com